**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 71/2020**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர். மோகன்தாஸ் | தாலுகா | : | நாகர்கோவில் |
| தந்தை பெயர் | : | ராமசுவாமி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | நாகர்கோவில் | வயது | : | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 01st, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சுஸ்ருதா மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். 11.11.2017 அன்று மாலை 04.20 மணியளவில் 47 வயது சரவணக்குமார் என்ற நபரை அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அன்றைய தினமே சொக்கம்பட்டி என்ற இடத்தில் சுமார் காலை 09.30 மணிக்கு அவருக்கு தெரிந்த நபர் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கியதாகவும், முதல் சிகிச்சை வேறு ஒரு மருத்துவமனையில் எடுத்ததாகவும் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது கீழ்க்கண்ட காயங்கள் ஏற்பட்டிருந்தன.

(1). சுமார் 15 செ.மீ அளவு தையல் போடப்பட்ட காயம் வலது மணிக்கட்டு பகுதியிலிருந்து முழங்கையின் நடுப்பகுதி வரை காணப்பட்டது. அவரின் வலது விரல்களில் இரத்த ஓட்டம் சீரான நிலையில் காணப்படவில்லை.

(2). வலது மணிக்கட்டில் ஒரு வெட்டுக்காயம் காயத்தின் வழியே துண்டாக்கப்பட்ட இரத்தக்குழாய் உணர்ச்சி நரம்புகள், விரல்கள் அசைவுக்கான தசை நரம்புகள் காணப்பட்டன. அவருக்கு நுண்கதிர் படங்கள் எடுக்கப்பட்டு, வலது மணிக்கட்டின் கீழ்ப்பகுதியிலுள்ள எலும்பு துண்டாக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

மேற்கூறிய காயங்கள் இரண்டும் கொடுங்காயம் என கருத்து கூறி, காயச்சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.3** ஆகும். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் அரிவாளால் ஏற்பட வாய்ப்புள்ளது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

சாட்சி நாகர்கோவில் முதன்மை மாவட்ட நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Sahayarani, Typist, முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.01 19:08:25 +0530